நாடு, சமூக நலனுக்கு முன்னுரிமை

மாணவர்களுக்கு குடியரசுத் தலைவர் அறிவுரை

வதோதரா, செப். 23: மாணவர்கள் தாங்கள் பணியாற்றும் துறையில் நாட்டு நலனுக்கும், சமூக நலன்களுக்கும் முன்னுரிமை அளிக்க வேண்டும். அப்போதுதான் அனைவரும் இணைந்து முன்னேற முடியும் என்று குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு தெரிவித்தார்.

குஜராத் மாநிலம் வதோதரா மகாராஜா சாயாஜிராவ் பல்கலைக்கழக 75-ஆவது பட்டமளிப்பு விழா புதன்கிழமை நடைபெற்றது. இதில் மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கி குடியரசுத் தலைவர் முர்மு பேசியதாவது:

பெண்கள் உயர்கல்வி மேற்கொள்வது தொடங்கி ஒவ்வொரு துறையிலும் அவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இது அனைவரையும் உள்ளடக்கிய இந்தியாவின் வளர்ச்சியை சாத்தியமாக்கும். இங்கு மாணவியர் அதிகஅளவில் பட்டம் பெற்றுள்ளனர்.

மாணவர்கள் தங்களுக்கும், தங்கள் குடும்பத்தினருக்கும் மட்டுமே பயன்படும் வகையில் கல்வியைப் பயன்படுத்துவதைத் தாண்டி, சமூகத்தின் பல்வேறு நலன்களுக்காக எவ்வாறு பங்களிக்க முடியும் என்பதை சிந்திக்க வேண்டும்.

பணியில் சேவை: மாணவர்கள் தாங்கள் பணியாற்றும் துறையில் நாடு, சமூக நலன்களுக்கு முன்னுரிமை அளித்தால், அனைவரும் இணைந்து முன்னேற முடியும். இத்தகைய முன்னேற்றம் அவர்களுக்கு மிகுந்த மனநிறைவை அளிப்பதுடன், தாங்கள் பெற்ற கல்வியின் உண்மையான அர்த்தத்தையும் உணர முடியும்.

நீங்கள் பொறியாளராக உருவெடுத்தால், மக்களின் வாழ்க்கையை மேம்படுத்தும் தொழில்நுட்பங்களை உருவாக்குங்கள். நீங்கள் மருத்துவராக உருவானால், மருத்துவத்தை வெறும் தொழிலாகக் கருதாமல், அதை ஒரு சேவையாகக் கருத வேண்டும். சேவையில் மனிதநேயமும் அமைதியும் அடங்கியுள்ளன; அது மனநிறைவையும் அளிக்கிறது. வாழ்வதற்கு வளங்கள் தேவைதான். ஆனால், செல்வம் மட்டுமே எல்லாம் அல்ல. பிறருக்கு சேவை செய்வதுதான் உண்மையான மனநிறைவை அளிக்கும்.

புதிய வாய்ப்புகள்: விஞ்ஞானிகளாகவளர்ந்தால் மனிதகுலத்தின் நலனைக் கருத்தில்கொண்டு பிரச்னைகளுக்குத் தீர்வுகளை உருவாக்க வேண்டும். கலைஞர்களாகவும் எழுத்தாளர்களாகவும் முன்னேறினால் தங்களது கலை மற்றும் படைப்புகள் மூலம் சமூகத்தின் உணர்வை மேம்படுத்த வேண்டும். தொழில்முனைவோர் வேலைவாய்ப்புகளையும் புதிய வாய்ப்புகளையும் உருவாக்க வேண்டும். இப்பல்கலைக்கழகம் கலை, அறிவியல், தொழில்நுட்பம், மருத்துவம், சட்டம், நுண்கலை, மேலாண்மை, ஊடகவியல் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் கல்வி வழங்குகிறது.

ஏ.ஐ. பயன்பாடு: தொழில்நுட்பம் வேகமாக முன்னேறிவரும் நிலையில், அதைப் பயன்படுத்தும்போது மாணவர்கள் தங்களது மனசாட்சியை விழிப்புடன் வைத்திருக்க வேண்டும். செயற்கை நுண்ணறிவு (ஏஐ) தொழில்நுட்பம் தீர்வுகளை வழங்க முடியும். ஆனால், சரியான கேள்விகளைக் கேட்பது உங்கள் கடமை. தொழில்நுட்பம் உங்களுக்கு வேகத்தை வழங்கலாம். ஆனால், எந்தத் திசையில் செல்ல வேண்டும் என்பதை நீங்கள்தான் தீர்மானிக்க வேண்டும்.

அரசமைப்பில் இடம்பெற்றுள்ள நீதி, சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய கொள்கைகளை மாணவர்கள் தங்கள் வாழ்க்கையிலும் பணியிடங்களிலும் பின்பற்ற வேண்டும் என்றார் குடியரசுத் தலைவர்.

வதோதரா மகாராஜா சாயாஜிராவ் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் மாணவர்களுக்கு பட்டச் சான்றிதழ்கள் மற்றும் பதக்கங்களை வழங்கிய குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு.

ஐ.நா.வில் மீண்டும் காஷ்மீர் பிரச்னையை எழுப்பிய துருக்கி அதிபர்

நியூயார்க், செப். 23: ஐ.நா. பொதுச்சபை கூட்டத்தின் 81-ஆவது உயர்நிலை அமர்வில் உலகத் தலைவர்கள் மத்தியில் உரையாற்றிய துருக்கி அதிபர் ரிசப் தயீப் எர்டோகன் காஷ்மீர் பிரச்னை குறித்துப் பேசியது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

ஏற்கெனவே சில ஆண்டுகளுக்கு முன்பு காஷ்மீர் பிரச்னை குறித்து அவர் ஐ.நா.வில் பேசியதற்கு இந்தியா கடும் கண்டனம் தெரிவித்திருந்தது. மத அடிப்படையில் பாகிஸ்தானுக்கு ஆதரவாகச் செயல்பட்டு வரும் எர்டோகன், ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின்போது இந்தியாவுக்கு எதிராக தாக்குதல் நடத்த பாகிஸ்தானுக்கு ட்ரோன் உள்ளிட்ட ஆயுதங்களை வழங்கியதுடன், பாகிஸ்தான் ராணுவத்தினருக்கு ட்ரோன் உள்பட பல்வேறு ஆயுதப் பயிற்சிகளையும் தங்கள் நாட்டு வீரர்கள் மூலம் அளித்தார்.

மேலும், பாகிஸ்தான், சவூதி அரேபியா, துருக்கி ஆகிய 3 நாடுகளும் அண்மையில் பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றையும் மேற்கொண்டன. இதன்படி, 3 நாடுகளில் எந்தவொரு நாட்டின் மீது நடத்தப்படும் தாக்குதலும், மற்ற நாடுகளின் மீதும் நடத்தப்பட்ட தாக்குதலாகவே கருதப்படும் என்று கூறப்பட்டது. இது இந்தியாவுக்கு எதிரான ஒப்பந்தமாகவே கருதப்படுகிறது.

இந்நிலையில், ஐ.நா. பொதுச் சபையில் செவ்வாய்க்கிழமை உரையாற்றிய எர்டோகன், 'தெற்காசியாவில், காஷ்மீர் பிரச்னை உள்ளிட்ட அனைத்து விவகாரங்களும், ஐ.நா. சாசனம் மற்றும் தொடர்புடைய தீர்மானங்களின் அடிப்படையில், பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கப்படுவது முக்கியம்' என்றார்

ஐ.நா. பொதுச் சபை கூட்டத்தில் காஷ்மீர் பிரச்னை குறித்து எர்டோகன் பேசுவது இது முதல் முறையல்ல. கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் நடைபெற்ற பொதுச் சபை கூட்டத்தில், காஷ்மீர் பிரச்னைக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

எனினும், 2024-ஆம் ஆண்டு ஐ.நா. பொதுச் சபையில் பேசியபோது ஜம்மு-காஷ்மீர் குறித்து எர்டோகன் எதுவும் பேசவில்லை.

2020-ஆம் ஆண்டு, ஐ.நா. பொதுச் சபையின் பொது விவாதத்தில் காணொலி உரை மூலம் பேசிய எர்டோகன், ஜம்மு-காஷ்மீர் பிரச்னையை குறிப்பிட்டிருந்தார்.

அப்போது எர்டோகனின் கருத்துக்கு இந்தியா கடும் எதிர்ப்பு தெரிவித்தது. காஷ்மீர் தொடர்பான துருக்கியின் கருத்து முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாதது என்று தெரிவித்ததுடன், பிற நாடுகளின் இறையாண்மையை மதிக்க துருக்கி கற்றுக்கொள்ள வேண்டும் என்றும், தனது சொந்தக் கொள்கைகள் குறித்து முழுமையாகச் சிந்திக்க வேண்டும் என்றும் இந்தியா வலியுறுத்தியது.

காஷ்மீர் குறித்து இஸ்லாமிய நாடுகள் கருத்து: இந்தியா நிராகரிப்பு

புது தில்லி, செப்.23: ஜம்மு-காஷ்மீர் குறித்து இஸ்லாமிய நாடுகள் கூட்டமைப்பின் தொடர்பு குழு (ஓஐசி) தெரிவித்த கருத்துகளை இந்தியா நிராகரித்துள்ளது.

அமெரிக்காவின் நியூயார்க் நகரில் ஐ.நா. பொதுச் சபை கூட்டம் நடைபெறுகிறது. இதனிடையே இஸ்லாமிய நாடுகள் கூட்டமைப்பு தொடர்பு குழுவின் வெளியுறவுத் துறை அமைச்சர்களின் கூட்டம் நடைபெற்றது. இதில் பேசிய பாகிஸ்தான் துணை பிரதமரும், வெளியுறவுத் துறை அமைச்சருமான முகம்மது இஷாக் தார், ஜம்மு-காஷ்மீர் விவகாரத்தை எழுப்பினார். அப்போது அவர், ஐ.நா. சபை மற்றும் பிற சர்வதேச அமைப்புகளில் ஜம்மு-காஷ்மீர் விவகாரத்தில் இஸ்லாமிய நாடுகள் அனைத்தும் ஒரே நிலைப்பாட்டை கடைப்பிடிக்க வேண்டுமென வலியுறுத்தினார். காஷ்மீர் மக்களின் விருப்பப்படியும், ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் தீர்மானங்களின்படியும் ஜம்மு-காஷ்மீர் விவகாரத்தில் அமைதி தீர்வு காணவே பாகிஸ்தான் விரும்புவதாகவும் அவர் தெரிவித்தார். இந்தத் தகவலை எக்ஸ் சமூகவலைதள பக்கத்தில் பாகிஸ்தான் வெளியுறவுத் துறை அமைச்சகம் பதிவிட்டுள்ளது.

இதேபோல் அந்த குழுவின் கூட்டறிக்கையிலும் ஜம்மு-காஷ்மீர் குறித்து கருத்து தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த கருத்துகளை இந்தியா திட்டவட்டமாக நிராகரித்துள்ளது.

இதுகுறித்து தில்லியில் உள்ள இந்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் புதன்கிழமை அறிவிப்பு வெளியிட்டுள்ளது. அதில், 'ஜம்மு-காஷ்மீர் விவகாரத்தில் இந்தியா குறித்து இஸ்லாமிய நாடுகளின் கூட்டமைப்பு குழுவின் கூட்டறிக்கையில் தேவையில்லாத மற்றும் தவறான தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தியாவின் உள்விவகாரம் குறித்து கருத்து தெரிவிக்க இஸ்லாமிய நாடுகளின் கூட்டமைப்புக்கு எந்த அதிகாரமும் கிடையாது. அந்த கருத்துகளை இந்தியா நிராகரிக்கிறது. இதுபோன்ற உள்நோக்கம் கொண்ட கருத்துகளை திரும்பத் திரும்ப தெரிவிப்பது, இஸ்லாமிய நாடுகளின் கூட்டமைப்பின் நம்பகத்தன்மை குறித்த தீவிர சந்தேகங்களை மட்டுமே எழுப்பும்.

புனையப்பட்ட, உள்நோக்கம் கொண்ட கதையை தெரிவிக்க பாகிஸ்தானுக்கு வாய்ப்பு அளிப்பதை விடுத்து, பயங்கரவாதத்துக்கு ஆதரவு மற்றும் நிதியுதவி அளிக்கும் பாகிஸ்தானுக்கு, அதன் கட்டுப்பாட்டு பகுதியில் இருந்து எழும் பயங்கரவாத அச்சுறுத்தலுக்கு தீர்வு காணும்படி இஸ்லாமிய நாடுகளின் கூட்டமைப்பு அறிவுரை வழங்க வேண்டும்.

ஜம்மு-காஷ்மீர், லடாக் பகுதி இந்தியாவின் ஒருங்கிணைந்த மற்றும் பிரிக்க முடியாத பகுதியாகும். ஆதலால் அரசியல் உள்நோக்கம் கொண்ட பிரசாரத்தை திரும்பத் திரும்ப செய்வதன் மூலம் உண்மை நிலை மாறாது' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிரிகளின் விமானப்படை ஓடுபாதைகளை அழிக்கும் நவீன ஆயுதங்கள் ரூ.811 கோடிக்கு கொள்முதல்

பிடிஎல் நிறுவனத்துடன் பாதுகாப்பு அமைச்சகம் ஒப்பந்தம்

புது தில்லி, செப்.23: எதிரிகளின் விமானப்படை ஓடுபாதைகளை செயற்கைக்கோள் வழிகாட்டுதலுடன் தாக்கி அழிக்கும் 160 நவீன ஆயுதங்களை (சாட்-எஸ்ஏஏடபிள்யு) ரூ.810.79 கோடிக்கு கொள்முதல் செய்வது தொடர்பாக பாரத் டைனாமிக்ஸ் லிமிடெட் (பிடிஎல்) நிறுவனத்துடன் பாதுகாப்பு அமைச்சகம் ஒப்பந்தம் செய்துள்ளது.

இதுகுறித்து பாதுகாப்பு அமைச்சகம் தரப்பில் தெரிவிக்கப்பட்டதாவது:

தரையில் உள்ள விமான ஓடுபாதைகள் உள்ளிட்ட கட்டமைப்புகள், போர் விமானங்கள் அல்லது ஹெலிகாப்டர்கள் மூலம் அருகில் சென்றே குண்டு வீசி தாக்கி அழிக்கப்படுகிறது. இதற்கு பதிலாக போர் விமானங்கள், ஹெலிகாப்டர்களில் நீண்ட தொலைவில் இருந்தபடி தரையில் உள்ள விமானப்படை உள்கட்டமைப்பு வசதிகளை தாக்கி அழிக்க பயன்படுத்தப்படும் சாட்-எஸ்ஏஏடபிள்யு கிளைட் குண்டு ஆயுதத்தை வாங்க பாதுகாப்பு அமைச்சகம் முடிவு செய்துள்ளது.

இந்த ஆயுதத்தை ஜாக்குவார், ஹாக், சுகோய் 30 போன்ற போர் விமானங்கள், ஹெலிகாப்டர்களில் இருந்து ஏவ முடியும்.

போர் விமானங்களில் விமானி இருந்தபடியே சுமார் 100 கிலோ மீட்டர் தொலைவில் தரையில் உள்ள விமான ஓடுபாதை உள்ளிட்ட இலக்கை குறி வைத்து தாக்க முடியும். விமானங்களில் இருந்து செலுத்தப்பட்டதும், அது செயற்கைக்கோள் வழிகாட்டுதலுடன் துல்லியமாக இலக்கை நோக்கி சென்று தாக்கி அழிக்கும் வல்லமை கொண்டது.

இந்த ஆயுதங்களையும், அதனுடன் இந்திய விமானப்படைக்கு தேவைப்படும் மேலும் சில ஆயுதங்களையும் பாதுகாப்பு அமைச்சகம் வாங்குகிறது. இதற்காக ரூ.810.79 கோடி மதிப்பிலான ஒப்பந்தத்தை பிடிஎல் நிறுவனத்துடன் பாதுகாப்பு அமைச்சகம் புதன்கிழமை மேற்கொண்டது. தில்லியில் பாதுகாப்பு அமைச்சக செயலாளர் ராஜேஷ் குமார் சிங் முன்னிலையில் ஒப்பந்தம் கையொப்பமானது.

இந்த ஆயுதங்கள் 2027-28, 2028-29ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்துக்குள் விமானப்படையிடம் ஒப்படைக்கப்படும் என கூறப்படுகிறது. இந்த ஆயுதங்கள் இந்திய விமானப்படையில்சேர்க்கப்படுவதன் மூலம் அதன் வலிமை மேலும் அதிகரிக்கும். சாட்-எஸ்ஏஏடபிள்யு ஆயுதமானது, உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்டது. அதை உருவாக்கியது டிஆர்டிஓ அமைப்பாகும்.

அதில் இருக்கும் உபகரணங்களும் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்டது தான்.

கனடாவில் டிசம்பர் மாதம் பிரதமர் மோடி சுற்றுப்பயணம்?: மார்க் கார்னி தகவல்

நியூயார்க், செப். 23: பிரதமர் நரேந்திர மோடி கனடாவில் வரும் டிசம்பர் மாதம் சுற்றுப்பயணம் செய்வார் என எதிர்பார்ப்பதாக அந்த நாட்டின் பிரதமர் மார்க் கார்னி தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் நியூயார்க் நகரில் நடைபெறும் ஐ.நா. பொதுச் சபை கூட்டத்தில் கலந்துகொள்ள வந்துள்ள மார்க் கார்னி செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது இந்தியாவுடன் கனடா தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் செய்து கொள்வது குறித்து நடத்திவரும் பேச்சுவார்த்தை குறித்து கேள்வியெழுப்பப்பட்டது. அதற்கு கார்னி அளித்த பதில் வருமாறு:

அமெரிக்காவின் புளோரிடாவில் வரும் டிசம்பர் மாதம் 14, 15-ஆம் தேதிகளில் டிரம்ப் ஏற்பாட்டின் பேரில் ஜி20 மாநாடு நடைபெறுகிறது. இதில் கலந்துகொள்ள அமெரிக்கா வரும் இந்திய பிரதமர் மோடி, கனடாவிலும் சுற்றுப்பயணம் செய்வார் என எதிர்பார்க்கிறோம்.

இந்தாண்டு நடைபெறும் ஜி20 மாநாட்டுக்குள் இருதரப்பு வர்த்தக ஒப்பந்தம் குறித்த பேச்சுவார்த்தைகளை முடித்துக் கொள்வதென கடந்த ஆண்டு நடைபெற்ற ஜி20 மாநாட்டின்போது உறுதி எடுத்திருந்தோம். அதுதொடர்பாக 2 நாடுகளும் நடத்திவரும் பேச்சுவார்த்தைகளிலும் நல்ல முன்னேற்றம் காணப்படுகிறது என்றார் அவர்.

கனடாவில் இருந்து அமெரிக்காவுக்கு ஏற்றுமதியாகும் பொருள்கள் மீதான வரிகளை டிரம்ப் உயர்த்தியதையடுத்து, அந்நாட்டின் பொருள்கள் மீது கனடாவும் வரிகளை உயர்த்தியுள்ளது. தனது வர்த்தக நடவடிக்கைகளுக்கு அமெரிக்காவை நம்பியிருக்கும் கனடா, வரிவிதிப்பு விவகாரத்துக்குப் பிறகு பிற நாடுகளின் சந்தைகளில் வர்த்தகத்தை இரண்டு மடங்காக அதிகரிக்க முடிவு செய்துள்ளது.

எனவே, இந்தியா, சீனா நாடுகளுடனான வர்த்தகத்தை அதிகரிக்க கனடா திட்டமிட்டுள்ளது.

இந்தியாவுடனும் கடந்த மார்ச் மாதம் முதல் தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் செய்து கொள்வது குறித்து பேச்சு நடத்தி வருகிறது.

தடை செய்யப்பட்ட பொருள்கள் விற்பனை

அமேசான் உள்ளிட்ட இணையவழி வர்த்தக நிறுவனங்கள் மீது நடவடிக்கை

புது தில்லி, செப். 23: தடை செய்யப்பட்ட மற்றும் தவறாக விளம்பரப் படுத்தப்படும் பொருள்களின் விற்பனைக்காக, அமேசான், ஸ்விக்கி இன்ஸ்டாமார்ட், பிக்பாஸ்கெட், ஃபிளிப்கார்ட், ஸெப்டோ உள்ளிட்ட இணையவழி வர்த்தக நிறுவனங்கள் மீது சட்ட நடவடிக்கையைத் தொடங்கியுள்ளதாக, இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையம் (எஃப்எஸ்எஸ்ஏஐ) தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக எஃப்எஸ்எஸ்ஏஐ புதன்கிழமை வெளியிட்ட சமூக ஊடக பதிவில், 'வர்த்தக ஒழுங்குமுறைகளுக்கு இணங்காததற்காக, அமேசான், ஸ்விக்கி இன்ஸ்டாமார்ட், பிக்பாஸ்கெட், ஸெப்டோ உள்ளிட்ட இணையவழி வர்த்தக நிறுவனங்கள் மீது தீவிர சட்ட நடவடிக்கை தொடங்கப்பட்டுள்ளது.

தடை செய்யப்பட்ட, விஷத்தன்மையுள்ள பொருள்கள், தவறாக விளம்பரப்படுத்தப்படும் பொருள்களின் காட்சிப்படுத்துதல் மற்றும் விற்பனைக்காக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 6 மாதங்களாக, உணவுப் பொருள் வர்த்தகர்கள் மற்றும் இணையவழி வர்த்தக நிறுவனங்கள் சட்ட விதிகளுக்கு இணங்குவதை உறுதி செய்யும் நடவடிக்கைகளை எஃப்எஸ்எஸ்ஏஐ தீவிரப்படுத்தியுள்ளது. மேலும், இந்த நடவடிக்கைகள் தொடர்பாக சமூக ஊடகங்களின் வாயிலாக நுகர்வோருக்கு தெரிவிக்கப்பட்டும்வருகின்றன.

நிதிநெருக்கடி: கர்நாடக காங்கிரஸ் அரசைக் கண்டித்து பாஜக போராட்டம்

பெங்களூரு, செப். 23: நிதி நெருக்கடியை எதிர்கொண்டுள்ள கர்நாடக காங்கிரஸ் அரசைக் கண்டித்து பாஜக போராட்டம் நடத்தியது.

காங்கிரஸ் அரசு மாநிலத்தை நிதி நெருக்கடிக்குத் தள்ளிவிட்டதாகவும், வளர்ச்சிப் பணிகளில் தோல்வியடைந்துவிட்டதாகவும் குற்றஞ்சாட்டி, பெங்களூரு விதான செளதா வளாகத்தில் புதன்கிழமை எதிர்க்கட்சித் தலைவர் ஆர். அசோக் தலைமையில் பாஜக தலைவர்கள் 'சொம்பு' (நிதி காலியாகி உள்ளதை குறிக்கும் வகையில்) ஏந்தி போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது, முதல்வர் டி.கே. சிவகுமார் ராஜிநாமா செய்ய வேண்டும் என்று சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் ஆர்.அசோக் வலியுறுத்தினார்.

தற்போதைய நிலையில் பெரிய அளவிலான செலவினத் திட்டங்களை மேற்கொள்வதைத் தவிர்க்க வேண்டும் என்றும், நிதி ஒதுக்கீட்டில் கட்டுப்பாடுகள் இருப்பதால் யதார்த்தமான மற்றும் எச்சரிக்கையான அணுகுமுறையைப் பின்பற்ற வேண்டும் என்றும் கர்நாடக நிதித் துறை செவ்வாய்க்கிழமை எச்சரித்திருந்த நிலையில், இந்தப் போராட்டம் நடைபெற்றது.

இந்த போராட்டத்தில் பாஜக மாநிலத் தலைவர் விஜயேந்திரா, சட்ட மேலவை எதிர்க்கட்சித் தலைவர் செலுவாதி நாராயணசாமி, பாஜக எம்எல்ஏக்கள், எம்எல்சிக்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். அவர்கள் காலி சொம்புகளை ஏந்தியபடி காங்கிரஸ் அரசுக்கு எதிராக முழக்கமிட்டனர். இதில் எதிர்க்கட்சித் தலைவர் ஆர்.அசோக் பேசியது:

நிதித் துறையை நிர்வகிக்கும் திறன் முதல்வர் டி.கே. சிவகுமாருக்கு இல்லை. எனவே, முதல்வர் பதவியில் தொடர அவருக்குத் தகுதியில்லை. உடனடியாக ராஜிநாமா செய்ய வேண்டும்.

கர்நாடக அரசு திவாலாகிவிட்டது. இது திவாலான அரசு. மாநிலத்தை நிர்வகிக்கும் திறனை கர்நாடக அரசு இழந்துவிட்டது. நிதித் துறை வெளியிட்டுள்ள வெள்ளை அறிக்கையில், நிதிப் பற்றாக்குறை காரணமாக முதல்வர் டி.கே. சிவகுமார் தலைமையிலான காங்கிரஸ் அரசு திவாலாகிவிட்டது என்பது வெளிப்பட்டுள்ளது என்றார்.

பாஜக மாநிலத் தலைவர் விஜயேந்திரா பேசுகையில், 'மாநிலத்தின் பொருளாதார நிலை குறித்து முதல்வர் வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும். இந்த காங்கிரஸ் அரசே தீவிர நிதிநெருக்கடியில் சிக்கியுள்ளது. வளர்ச்சிப் பணிகளுக்கு ஒரு ரூபாய்கூட இல்லை. ஏழைகளுக்கு நிவாரணம் வழங்குவதற்கும், விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்குவதற்கும் தற்போது பணம் இல்லை.

நிதிநெருக்கடியில் சிக்கியுள்ள காங்கிரஸ் அரசு, விளம்பரங்களை வெளியிட்டு காலத்தை கடத்துகிறது. மாற்றுத்திறனாளிகளுக்கான ஓய்வூதியம், முதியோர், விதவைகளுக்கான ஓய்வூதியங்களை வழங்குவதற்குக்கூட கர்நாடக அரசால் முடியவில்லை.

மாநில காங்கிரஸ் அரசு மக்களுக்கு எதிரானது. வரும் நாள்களில் எந்தவிதமான வளர்ச்சியையும் எதிர்பார்க்க முடியாது. முதல்வர் பதவியில் உங்களுக்கு (டி.கே. சிவகுமார்) இன்னும் ஓராண்டு மட்டுமே உள்ளது. மீதமுள்ள காலத்தில் வெறும் பேச்சுகளைப் பேசிக் கொண்டிருப்பதற்குப் பதிலாக, மாநிலத்தின் உண்மையான நிலை என்ன என்பதை மக்களிடம் தெரிவியுங்கள். மாநிலத்தின் நிதிநிலை மோசமாக இருந்தபோதிலும், காங்கிரஸ் அரசு தவறான வாக்குறுதிகளை அளித்து வருகிறது. இதனால் கர்நாடகத்தின் வளர்ச்சிப் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன' என்றார்.

equitas Small Finance Bank எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்

தலைமை அலுவலகம்: எண்.769, ஸ்பென்சர் பிளாசா, 4வது தளம், பேஸ் II, அண்ணாசாலை, சென்னை, தமிழ்நாடு - 600002. போன் : 044-4299 5000 / 044-4299 5050

அசையா சொத்து விற்பதற்கான மின் ஏல விற்பனை அறிவிப்பு

SARFAESI சட்டம் 2002 மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 விதிகள் 8(6) & 9-ன் கீழ்

இதன் மூலம் குறிப்பாக கடன்தாரர்கள், இணை கடன்தாரர்கள் மற்றும் ஜாமீன்தாரர்கள் மற்றும் பொதுவாக பொது மக்களுக்கும் அறிவிப்பது என்னவென்றால் கீழே விரிவாக குறிப்பிடப்பட்டுள்ள அசையா சொத்துகள் ஈட்டுறுதி கடன் அளித்தவருக்கு அடமானம் வைக்கப்பட்டுள்ளது. எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்-க்கு செலுத்த வேண்டிய 22/09/2025 அன்று வரை உள்ள கடன் பாக்கி தொகையான **ரூ.33,84,534/- (ரூபாய் முப்பத்து மூன்று லட்சத்து எண்பத்து நான்காயிரத்து ஐநூற்று முப்பத்து நான்கு மட்டும்)** மேலும் 23/09/2025 முதல் பின் வட்டியுடன் சேர்த்து கடன்தாரர்கள்/இணை கடன்தாரர்கள் மற்றும் ஜாமீன்தாரர்களான **1. திருமதி.S.சுபாஷினி, க/பெ, திரு.K.சத்தியசீலன்,** மனை எண்.3, அசோக் கார்டன், அவலப்பள்ளி சாலை, ஒசூர், கிருஷ்ணகிரி-635109, தமிழ்நாடு. **மேலும்:** சர்வே எண்.342, சஞ்சய் காந்தி நகர், அச்செட்டிப்பள்ளி கிராமம் மற்றும் பஞ்சாயத்து, ஒசூர் தாலுக்கா, கிருஷ்ணகிரி மாவட்டம் - 635 109 தமிழ்நாடு. **2. திரு.K.சத்தியசீலன், த/பெ, திரு. கிருஷ்ணசாமி,** மனை எண்.3, அசோக் கார்டன், அவலப்பள்ளி சாலை, ஒசூர், கிருஷ்ணகிரி-635 109, தமிழ்நாடு. ஆகியோர்களிடமிருந்து வசூலிப்பதற்காக எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அதிகாரபூர்வ அதிகாரியால் சுவாதீனம் செய்யப்பட்ட சொத்தினை **"எங்கு உள்ளதோ அங்கு அப்படியே, என்ன உள்ளதோ அப்படியே மற்றும் எப்படியிருந்தாலும் அப்படியே" "எந்த ஒரு புகார் இல்லாத"** என்ற அடிப்படையில் **14/10/2026** அன்று விற்பனை செய்யப்பட உள்ளது என்று இந்த அறிவிப்பு வழங்கப்படுகிறது.

சுவாதீன நிலை	அசல் சுவாதீனம்
குறைந்த பட்ச விலை	ரூ.19,50,000/- (ரூபாய் பத்தொன்பது லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)
முன்வைப்பு தொகை	ரூ.1,95,000/- (ரூபாய் ஒரு லட்சத்து தொண்ணூற்று ஐந்தாயிரம் மட்டும்)
ஏல உயர்வு தொகை	ரூ.10,000/- (விலைப்புள்ளி உயர்த்துவதற்காக)
சொத்துக்களை பார்வையிடும் தேதி & நேரம்	28/09/2026 முதல் 09/10/2026, காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை (தொடர்புக்கு: 1. திரு.ஜெயசந்திரன்.P.S - +91-8220661698 2. திரு.தர்மலிங்கம்.K - +91-9715925346)
முன்வைப்பு தொகையுடன் தேவையான ஆவணங்களை சமர்பிக்க கடைசி தேதி மற்றும் நேரம்	13/10/2026 - பிற்பகல் 1.00 மணி
மின்ஏல விற்பனை தேதி & நேரம்	14/10/2026 - காலை 11.30 மணி முதல் 12.00 மணி வரை
மின்ஏல போர்டல் பெயர்	https://www.bankeauctions.com
தொடர்புக்கான முகவரி	அதிகாரபூர்வ அதிகாரி (AHF – LEGAL), எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட் : 4வது தளம், பேஸ் II, எண்.769, ஸ்பென்சர் பிளாசா, அண்ணா சாலை, சென்னை, தமிழ்நாடு - 600002.
சொத்தின் முகவரி	S.F. எண். 342, புதிய S.F.எண்.342/2B1A1A1A1, சஞ்சய் காந்தி நகர், அச்செட்டிப்பள்ளி கிராமம் மற்றும் பஞ்சாயத்து, ஒசூர் தாலுக்கா, கிருஷ்ணகிரி மாவட்டம் - 635109

அட்டவணை சொத்து:

திருமதி.S.சுபாஷினி அவர்களுக்கு சொந்தமான குடியிருப்பு சொத்து:

கிருஷ்ணகிரி பதிவு மாவட்டம் மற்றும் கேலமங்கலம் துணை பதிவு மாவட்டத்திற்கு உட்பட்ட ஒசூர் தாலுகா, அச்செட்டிப்பள்ளி கிராமத்தில் சர்வே எண். 342, தரிசு பரப்பளவு ஹெக்டேர் 8.80 சென்ட் இதில் ஏக்கர் 7.13 சென்ட் நிலம் இதில் புதிய உட்பிரிவு சர்வே எண்.342/2B, மேலும் உட்பிரிவு செய்யப்பட்டு புதிய சர்வே எண்.342/2B1A1A1A1, தரிசு பரப்பளவு ஹெக்டேர் 1.46.96 வரி மதிப்பீடு ரூ.1.60, மேற்குறிப்பிட்டுள்ள நிலங்கள், பல்வேறு வீட்டு மனைகளாக பிரிக்கப்பட்டு மற்றும் "சஞ்ஜெய் காந்தி நகர்"என பெயரிடப்பட்டுள்ள மனை பிரிவில் 970 சதுர அடி பரப்பளவு நிலத்தின் எல்லைகள் கீழ்குறிப்பிட்டுள்ளபடி: கிழக்கில்: சர்வே எண்.345-ல் உள்ள நிலம், மேற்கில் : 20 அடி அகல சாலை, வடக்கில்: ரங்கபண்டித அக்ரஹாரம் கிராம எல்லை, தெற்கில் : சர்வே எண்.343-ல் உள்ள நிலம், இந்த எல்லைகளுக்குள் **அளவுகள்:** கிழக்கு மேற்காக வடக்கு பகுதியில்: 68.2 அடி, கிழக்கு மேற்காக தெற்கு பகுதியில்: 60.0 அடி, வடக்கு தெற்காக கிழக்கு பகுதியில்: 00.0 அடி, வடக்கு தெற்காக மேற்கு பகுதியில்: 32.3 அடி, மொத்தப்பரப்பளவு 970 சதுர அடி பரப்பளவு நிலம் மற்றும் அனைத்து மனை பிரிவு சாலைகளில் உள்ள பொது உரிமைகள் உட்பட. இதன் புதிய உட்பிரிவு சர்வே எண். 342/2B1A1A1A1,மேலும் உட்பிரிவு செய்யப்பட்டு சர்வே எண்.342/27D, தரிசு பரப்பளவு ஹெக்டேர் 0.0.90 வரி மதிப்பீடு ரூ.0.01, பட்டா எண்.5847 மற்றும் அங்குள்ள அனைத்து கட்டிடங்கள் மற்றும் அங்கு இணைக்கப்பட்டுள்ள கட்டுமானங்கள் மற்றும் பூமியில் பொருத்தப்பட்டுள்ள அல்லது நிலத்தில் நிலையாக பொருத்தப்பட்டுள்ள ஏதேனும் பொருட்கள் தற்போதும் எதிர்காலத்திற்கும் சேர்ந்தது மற்றும் அனைத்து வசதி உரிமைகள் / வழக்கமான உரிமைகள் உட்பட.

விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்: 1. விருப்பமுள்ள கொள்முதல்தாரர்கள் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு வங்கியின் **www.equitas.bank.in** என்ற இணையதளத்தை பார்க்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். மேலும் தற்போதைய அறிவிப்பு வங்கியின் அதிகாரப்பூர்வ இணையதளமான **https://equitas.bank.in/important-notices/**-ல் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

2. முன்வைப்பு தொகையினை (EMD) எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்-என்ற பெயருக்கு மின்னணு மூலமாக (RTGS / NEFT) **கணக்கு எண். 200000807725,** திநகர் கிளை, பாக்யம் கவேரியா, புதிய எண்.18, பசுல்லா சாலை, தி.நகர், சென்னை - 600017, IFSC **குறியீடு:** ESFB0001001, ஆன் லைனில் விலைப்புள்ளிகளை சமர்ப்பிப்பதற்கு முன்பாக அல்லது மேற்குறிப்பிட்டுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள தேதிக்கு முன்பாக சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

3. ஏல விற்பனையானது ஆன்லைன் மின் ஏலம் **https://www.bankeauctions.com** என்ற இணையதளம் மூலமாக நடத்தப்படும்.

குறிப்பு: (i) வெற்றி பெற்ற ஏலதாரர் விற்பனை முடிவு செய்யப்பட்ட தொகையில் 25% (முன்னர் செலுத்தப்பட்ட முன்வைப்புத்தொகை உட்பட) விற்பனை செயல்முறைகள் முடிவு செய்யப்பட்ட தேதியன்று உடனடியாக செலுத்த வேண்டும் அல்லது அடுத்த வேலை நாட்களில் மேற்குறிப்பிட்ட விற்பனை முறையின்படி செலுத்த வேண்டும்.

(ii) முன்னர் செலுத்திய முன்வைப்புத்தொகை உட்பட மேற்குறிப்பிட்ட 25% தொகையை செலுத்த தவறும் பட்சத்தில் ஏலப் படிவத்துடன் செலுத்திய தொகையில் 50% கழிக்க வங்கிக்கு உரிமை உண்டு.

4. ஏலதாரர்கள் தங்களது விலைப்புள்ளிகளை சமர்ப்பிப்பதற்கு முன்பு ஏல விற்பனைக்கான விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை **https://www.bankeauctions.com** என்ற இணையதளத்தை பார்க்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள் மற்றும் மின் ஏல விற்பனை செயல்முறைகளில் பங்குகொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

கடன்தாரர்கள் / இணை கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர்களுக்கான விற்பனை அறிவிப்பு (உரிமை (அமலாக்கம்) சட்ட விதிகள் 2002 விதி 8 (6)-ன் கீழ்)

தங்களுக்கு தெரிவிப்பது யாதெனில் மேற்குறிப்பிட்டுள்ள நிர்ணயிக்கப்பட்டுள்ள விற்பனை தேதிக்கு முன்பாக நிலுவைத்தொகை முழுவதையும் செலுத்துமாறு இந்த அறிவிப்பு வெளியிடப்படுகிறது, தவறும்பட்சத்தில் SARFAESI சட்டம் 2002-ன் கீழ் இந்த சொத்து விற்பனை செய்யப்படும். மேலும் தாங்கள் இந்த விற்பனையில் கலந்துக்கொண்டு விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் படி முன்வைப்பு தொகை உட்பட செலுத்தி பங்குபெறலாம் அல்லது தகுதியான கொள்முதல்தாரர்களை அழைத்து வரலாம்.

இடம் : சென்னை — அதிகாரபூர்வ அதிகாரி

தேதி : 22/09/2026 — எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்-க்காக

வரசக்தி ஹவுசிங் ஃபைனான்ஸ் பிரைவேட் லிமிடெட்

பதிவு அலுவலகம்: எண்.33, பழைய எண்.14, 4வது தெரு, வேது அவென்யூ, அசோக் நகர், சென்னை-600 083 தலைமை அலுவலகம்: சாய் சதன், T.S.எண்.125 (வடக்கு போர்), சிட்கோ திருவிக இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், ஈக்காட்டுத்தாங்கல், சென்னை 600032

APPENDIX – IV-A [See proviso to Rule 8(6) of the Security Interest (Enforcement) Rules, 2002]

இ - ஏல விற்பனை அறிவிப்பு அசையா சொத்துக்களுக்கான விற்பனை

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, கடனீட்டு சொத்துக்கள் (அமலாக்கம்) விதிகள் 2002-ன் விதி 8(6) உடன் கீழ், அசையா சொத்துக்களின் இ-ஏல விற்பனை அறிவிப்பு.

கடன் வழங்கிய நிறுவனத்திடம் அடமானத்தில் வைக்கப்பட்டுள்ள கீழ்கண்ட சொத்து கடன் வழங்கிய நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் **சுவாதீனத்தில்** எடுக்கப்பட்டு கடன் வழங்கிய நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய கடன் தொகையை வசூலிப்பதற்காக கீழே குறிப்பிட்டுள்ள சொத்தின் **"உள்ள இடத்தில் உள்ளவாறு", "உள்ளது உள்ளவாறு", "உள்ளதெல்லாம் உள்ளவாறு"** என்ற அடிப்படையில் இ-ஏலம் வாயிலாக விற்பனை செய்யப்படும் என இதன் மூலம் பொது மக்களுக்கும் குறிப்பாக கடன்தாரர்கள் / சக-கடன்தாரர்கள் / அடமானதாரர்கள் / ஜாமீன்தாரர்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

கிருஷ்ணகிரி கிளை : கதவு எண்.1/154-42, முதல் தளம், ராஜாஜி நகர், ஸ்டேடியம் ரோடு அருகில், கிருஷ்ணகிரி தாலுகா & மாவட்டம், தமிழ்நாடு-635001

வ.எண்.1: கடன்தாரர்கள் / சக-கடன்தாரர்கள் / அடமானதாரர்கள் / ஜாமீன்தாரர்கள்: 1.Mr.பிரகாஷ் P, S/o.பெருமாள், **2.Mrs.லட்சுமியம்மா P,** W/o.பெருமாள், **3.Mr.பெருமாள்,** S/o.ராஜகோபால், **அனைவரது முகவரி,** மனை கதவு எண்.2/781A, வேப்பனப்பள்ளி கிராமம் & அஞ்சல், கிருஷ்ணகிரி தாலுகா மற்றும் மாவட்டம், தமிழ்நாடு-635121; கடன் கணக்கு எண்: **1001051002300122;** பிரிவு 13(2)-ன் கீழ் கோரிக்கை அறிவிப்பு தேதி: **08.12.2025;** கோரிக்கை அறிவிப்பில் கோரப்பட்ட தொகை: 20.11.2025 அன்றுள்ளபடி ₹17,65,071.49; பிரிவு 13(4)-ன் கீழ் சுவாதீனம் எடுத்த தேதி: **06.02.2026;** சுவாதீனம் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள நிலுவைத் தொகை: 31.01.2026 அன்றுள்ளபடி ₹ **18,34,984.06; கடன் வழங்கிய நிறுவனத்திற்கு செலுத்தப்பட வேண்டிய நிலுவைத்தொகை: 19.09.2026 அன்றுள்ளபடி ₹20,60,461.99** மற்றும் கடன் தொகை முழுவதும் செலுத்தும் காலம் வரை வட்டி, கட்டணங்கள் மற்றும் இதர செலவுகள்.

சொத்து விபரம்: கிருஷ்ணகிரி பதிவு மாவட்டம், வேப்பனப்பள்ளி சார் பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட, சர்வே எண்.46/1, சப் டிவிஷன் சர்வே எண்.46/1A1-ல் உள்ள புஞ்சை பரப்பு ஹெக்டேர் 1.24.5, இதில் **மனை எண்.73, வேப்பனப்பள்ளி கிராமம், கிருஷ்ணகிரி தாலுகா, கிருஷ்ணகிரி மாவட்டம்** என்னும் முகவரியில் கிழக்கு மேற்காக இரண்டு பக்கமும் 17.5 அடி, தெற்கு வடக்காக கிழக்கு பக்கம் 48 அடி, தெற்கு வடக்காக மேற்கு பக்கம் 51 அடி, **ஆக மொத்தம் 866.25 சதுர அடி நிலம் மற்றும் அதில் கட்டப்படவுள்ள RCC கட்டிடம்** அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும், அதனுடன் பொது வழிப்பாதை மற்றும் அனைத்து அனுபந்த உரிமைகள். எல்லைகள்: கிழக்கு: மனை எண்.72, மேற்கு: மனை எண்.74, வடக்கு: 12 அடி அகல ரோடு, தெற்கு: மனை எண்.59, இந்த சொத்தானது வேப்பனப்பள்ளி கிராம பஞ்சாயத்து மற்றும் வேப்பனப்பள்ளி ஒன்றிய குழு எல்லைக்குள் வருகிறது. மேலே குறிப்பிட்டுள்ள நிலமானது புதிய சப் டிவிஷன் சர்வே எண்.46/13-கீழ் வருகிறது.

சொத்தானது நிறுவனத்தின் நேரடி சுவாதீனத்தில் உள்ளது

குறைந்தபட்ச கேட்பு விலை	டெபாசிட் தொகை (EMD)	ஏல உயர்வுத் தொகை
₹ 29,96,875/-	₹ 2,69,719/-	₹ 15,000/-

வ.எண்.2: கடன்தாரர்கள் / சக-கடன்தாரர்கள் / அடமானதாரர்கள் / ஜாமீன்தாரர்கள்: 1.K.ராமதாஸ், S/o.கண்ணன், **2.R.ஆனந்தி,** W/o.ராமதாஸ், **இருவரது முகவரி,** கதவு எண்.49, காலனி புலியம்பட்டி, ஒட்டப்பட்டி, போச்சம்பள்ளி, கிருஷ்ணகிரி - 635203; கடன் கணக்கு எண்: **1001051003000010;** பிரிவு 13(2)-ன் கீழ் கோரிக்கை அறிவிப்பு தேதி: **17.03.2026;** கோரிக்கை அறிவிப்பில் கோரப்பட்ட தொகை: **13.03.2026** அன்றுள்ளபடி ₹5,32,096.50; பிரிவு 13(4)-ன் கீழ் சுவாதீனம் எடுத்த தேதி: **01.06.2026;** சுவாதீனம் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள நிலுவைத் தொகை: **28.05.2026** அன்றுள்ளபடி ₹ **5,44,152.10; கடன் வழங்கிய நிறுவனத்திற்கு செலுத்தப்பட வேண்டிய நிலுவைத்தொகை: 22.09.2026 அன்றுள்ளபடி** ₹ **5,83,630.97** மற்றும் கடன் தொகை முழுவதும் செலுத்தும் காலம் வரை வட்டி, கட்டணங்கள் மற்றும் இதர செலவுகள்.

சொத்து விபரம்: கிருஷ்ணகிரி பதிவு மாவட்டம், போச்சம்பள்ளி சார் பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட சர்வே எண்.790/1-ல் புஞ்சை பரப்பு ஹெக்டேர் 0.17.5, ஏக்கர் 0.43 சென்ட், இதில் **மூக்கம்பட்டி கிராமம், போச்சம்பள்ளி தாலுகா, கிருஷ்ணகிரி மாவட்டம்** என்னும் முகவரியில் **ஏக்கர் 0.04 சென்ட் (அல்லது) 1801.2 சதுர அடி நிலம், அதில் கட்டப்படவிருக்கிற RCC தளம் போட்ட கட்டிடம்.** எல்லைகள்: (கிராம நிர்வாக அலுவலரால் வழங்கப்பட்ட எல்லை சான்றிதழ் படி) கிழக்கு: Mrs.ராஜேஸ்வரி-க்கு சொந்தமான நிலம், மேற்கு: Mr.முருகா கவுண்டர்-க்கு சொந்தமான நிலம், தெற்கு: Mr.முருகா கவுண்டர்-க்கு சொந்தமான நிலம், வடக்கு: 5 அடி அகல பொது ரோடு. சுவாதீன வகை: அடையாளபூர்வ சுவாதீனம்

குறைந்தபட்ச கேட்பு விலை	டெபாசிட் தொகை (EMD)	ஏல உயர்வுத் தொகை
₹ 6,48,360/-	₹ 64,836/-	₹ 10,000/-

தர்மபுரி கிளை : எண்.1162, தரைத்தளம், "C" டாக்டர் நாகராஜ் தெரு, AVC TVS ஷோரூம் அருகில், எலக்கியம்பட்டி, தர்மபுரி - 636 704

வ.எண்.3: கடன்தாரர்கள் / சக-கடன்தாரர்கள் / அடமானதாரர்கள் / ஜாமீன்தாரர்கள்: 1.செல்வம் K, S/o.குப்புசாமி, **2.Mr.தங்கராசு,** S/o.செல்வம், **3.Mr.வீரமணி S,** S/o.செல்வம், **3.Mr.குமுதா S,** W/o.செல்வம், **அனைவரது முகவரி,** கதவு எண்.2/17-3, எரியூர், போயர் தெரு, பென்னகரம், கஞ்சல்நத்தம், மாரியம்மன் கோவில் தெரு, தர்மபுரி மாவட்டம் - 636810; கடன் கணக்கு எண்: **1000652003000016;** பிரிவு 13(2)-ன் கீழ் கோரிக்கை அறிவிப்பு தேதி: **08.12.2025;** கோரிக்கை அறிவிப்பில் கோரப்பட்ட தொகை: 20.11.2025 அன்றுள்ளபடி **₹19,79,603.90;** பிரிவு 13(4)-ன் கீழ் சுவாதீனம் எடுத்த தேதி: **16.02.2026;** சுவாதீனம் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள நிலுவைத் தொகை: 31.01.2026 அன்றுள்ளபடி ₹ **20,55,284.06; கடன் வழங்கிய நிறுவனத்திற்கு செலுத்தப்பட வேண்டிய நிலுவைத்தொகை: 19.09.2026 அன்றுள்ளபடி** ₹23,23,773.97 மற்றும் கடன் தொகை முழுவதும் செலுத்தும் காலம் வரை வட்டி, கட்டணங்கள் மற்றும் இதர செலவுகள்.

சொத்து விபரம்: தர்மபுரி பதிவு மாவட்டம், பென்னாகரம் சார் பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட, **தர்மபுரி மாவட்டம், பென்னாகரம் தாலுகா, கஞ்சல்நத்தம் கிராமத்தில்,** சர்வே எண்.408/1-ல் உள்ள புஞ்சை பரப்பு ஹெக்டேர் 1.18.0 மற்றும் புதிய சப் டிவிஷன் சர்வே எண்.408/1A1-ல் உள்ள புஞ்சை பரப்பு ஹெக்டேர் 1.15.12, இதில் உள்ள நிலத்தின் **பரப்பு 2360 சதுர அடி அல்லது 219.25 சதுர மீட்டர் நிலம் மற்றும் அதில் கட்டப்பட்டுள்ள RCC கட்டிடம்** அதனுடன் பொது வழிப்பாதை மற்றும் அனைத்து அனுபந்த உரிமைகள். எல்லைகள்: Mr.மாரியப்பன்-க்கு சொந்தமான நிலம் மற்றும் மனை எண்.57-க்கு தெற்கு, 15 அடி அகல பொது ரோட்டுக்கு வடக்கு, மனை எண்.53-க்கு மேற்கு, மனை எண்.51-க்கு கிழக்கு. இந்த சொத்தானது கஞ்சல்நத்தம் கிராம பஞ்சாயத்து மற்றும் பென்னாகரம் ஒன்றிய குழு எல்லைக்குள் வருகிறது.

சொத்தானது நிறுவனத்தின் நேரடி சுவாதீனத்தில் உள்ளது

குறைந்தபட்ச கேட்பு விலை	டெபாசிட் தொகை (EMD)	ஏல உயர்வுத் தொகை
₹ 43,95,510/-	₹ 4,39,551/-	₹ 15,000/-

வ.எண்.4: கடன்தாரர்கள் / சக-கடன்தாரர்கள் / அடமானதாரர்கள் / ஜாமீன்தாரர்கள்: 1.Mr.பிரபு M, S/o.முருகன், **2.Mrs.திபிகா,** W/o.பிரபு, **இருவரது முகவரி,** எண்.5/280 K அக்ரஹாரம், திருவணப்பட்டி அஞ்சல், இச்சம்பாடி தர்மபுரி, அரசு நடுநிலைப்பள்ளி அருகில், தர்மபுரி, தமிழ்நாடு - 635202; கடன் கணக்கு எண்: **1000651003000032;** பிரிவு 13(2)-ன் கீழ் கோரிக்கை அறிவிப்பு தேதி: **08.12.2025;** கோரிக்கை அறிவிப்பில் கோரப்பட்ட தொகை: 20.11.2025 அன்றுள்ளபடி **₹15,85,010.77;** பிரிவு 13(4)-ன் கீழ் சுவாதீனம் எடுத்த தேதி: **16.02.2026;** சுவாதீனம் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள நிலுவைத் தொகை: 31.01.2026 அன்றுள்ளபடி ₹ **16,35,916/-; கடன் வழங்கிய நிறுவனத்திற்கு செலுத்தப்பட வேண்டிய நிலுவைத்தொகை: 19.09.2026 அன்றுள்ளபடி** ₹18,54,706.66 மற்றும் கடன் தொகை முழுவதும் செலுத்தும் காலம் வரை வட்டி, கட்டணங்கள் மற்றும் இதர செலவுகள்.

சொத்து விபரம்: தர்மபுரி பதிவு மாவட்டம், மொரப்பூர் சார் பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட, **தர்மபுரி மாவட்டம், கரியமங்கலம் தாலுகா, K.அக்ரஹாரம் கிராமத்தில்** சர்வே எண்.50/2C-ல் உள்ள புஞ்சை பரப்பு ஹெக்டேர் 0.20.00, தீர்வை ரூ.0.28, இதில் உள்ள புஞ்சை நிலத்தின் பரப்பு **ஹெக்டேர் 0.02.0 அல்லது ஏக்கர் 0.05 சென்ட் நிலம் மற்றும் அதில் கட்டப்படவுள்ள RCC கட்டிடம்** அதனுடன் பொது வழிப்பாதை மற்றும் அனைத்து அனுபந்த உரிமைகள். எல்லைகள்: சர்வே எண்.50/2B-ல் உள்ள Mr.திருப்பதிக்கு சொந்தமான நிலம், தெற்கு: சர்வே எண்.50/2D-ல் உள்ள Mr.பாலுஅய்யர்-க்கு சொந்தமான நிலம், கிழக்கு: 12 அடி அகல தார் ரோடு, மேற்கு: சர்வே எண்.50/2C-ல் உள்ள Mr.திருப்பதிக்கு சொந்தமான நிலம்.

சொத்தானது நிறுவனத்தின் நேரடி சுவாதீனத்தில் உள்ளது

குறைந்தபட்ச கேட்பு விலை	டெபாசிட் தொகை (EMD)	ஏல உயர்வுத் தொகை
₹ 23,15,430/-	₹ 2,31,543/-	₹ 15,000/-

இ-ஏல தேதி & நேரம் 27.10.2026, காலை 11.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை விற்பனை முடியும் வரை தலா 10 நிமிடங்கள் கொண்ட கால வரம்பற்ற நீட்டிப்புகள் அனுமதிக்கப்படும்

EMD சமர்பிக்கும் கடைசி தேதி & நேரம்: 26.10.2026, மாலை 5.00 மணிக்கு

சொத்தினை பார்வையிடும் தேதி & நேரம்: 24.10.2026 மதியம் 12.00 மணியிலிருந்து 2.00 மணி ரை

உத்தேச விலைக்குறிப்பீட்டாளர்கள் சொத்துக்களை பார்வையிட தொடர்பு கொள்ள வேண்டிய நபர்கள்: அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி வினோத்குமார் புண்ணியகோடி- Mob : 99400 92990, வேலு.G - Mob : 94886 28053

இ-ஏலம் சேவை வழங்குனர் : C1 India Pvt. Ltd.

இ-ஏலம் இணையதளம்: https://www.bankeauctions.com

இ-ஏலத்தின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் இ-ஏல இணையதளத்தில் கிடைக்கும்.

கடனீட்டு சொத்துக்கள் (அமலாக்கம்) விதிகள் 2002-ன் விதி 8(6)-இன் கீழ், அடமானமாக உள்ள அசையாச் சொத்தை விற்பனை செய்வதற்கான முன்மொழிவு குறித்து, கடன்தாரர்கள் / சக-கடன்தாரர்கள் / அடமானதாரர்கள் / ஜாமீன்தாரர்கள் ஆகியோருக்கு இதன் மூலம் முப்பது (30) நாட்கள் அவகாசம் கொண்ட அறிவிப்பாக இது வழங்கப்பட்டுள்ளது.

இடம்: சென்னை — அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி

தேதி: 22.09.2026 — வரசக்தி ஹவுசிங் ஃபைனான்ஸ் பிரைவேட் லிமிடெட்